முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

வழக்கு எண். ஓ.எஸ்.46/11

2019ம் வருடம் நவம்பர் மாதம் 1ம் நாள் வெள்ளிக்கிழமை

டி டபிள்யூ. 1 என்பவரது வாக்கு மூலம் (1873ம் வருடத்திய 10வது விதியின்படி என்பவரால் ஆணையிடப்பட்டு பிரமாணம்
செய்யப்படுகிறது,

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சந்திரா | தந்தைபெயர் | |
| கிராமம் | | தாலுகா | |
| சமயம் | | ஜாதி | |
| தொழில் | | வயது | |

தேதி : 1.11.2019

குறுக்கு விசாரணை வாதிகள் தரப்பில்

எனக்கு மொத்தம் 6 குழந்தைகள். 1வது வாதி என்னுடைய முதல் குழந்தை. 2வது வாதி என்னுடைய 2வது குழந்தை. 27.11.1990 என்னுடைய கணவர் இறந்து போனார். என்னுடைய கணவர் இறப்பதற்கு முன்பாக வாதிகளுக்கு திருமணம் ஆகிவிட்டது. 2வது வாதிக்கு என்னுடைய கணவர் இறப்பதற்கு முன்பாக 6 மாதத்திற்கு முன் திருமணம் நடந்தது. வாதி தன்னுடைய பாகத்தை கேட்டு தான் வழக்கை தாக்கல் செய்திருக்கின்றார்கள். வழக்குரையில் அவர்கள் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் மட்டும் தான் என்னுடைய கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரி தான். தாவா சொத்துக்கள் சில சொத்துக்கள் என்னுடைய கணவர் கிரையம் வாங்கியது என்றும் மற்ற சொத்துக்கள் பூர்வீகச் சொத்துக்கள் என்று சொன்னால் அனைத்து சொத்துக்களுமே பூர்வீகச் சொத்துக்கள் தான். என்னுடைய மாமனாருடைய சொத்துக்கள் என் கணவருடைய சகோதரர்கள் சேர்ந்து பாகம் செய்து கொண்டார்கள் அது நடந்தது 1979 வருடம் ஆகும். அதற்கு பிறகு பாகப்பிரிவு சொத்துக்கள் என்னுடைய கணவர் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வந்தார். 6வது இலக்க சொத்து என்னுடைய கணவர் வீடு ஒன்றை கடன் வாங்கி கட்டியது உண்மை தான். என்னுடைய கணவர் ஆசிரியராக இருந்து வந்தது உண்மை தான். என்னுடைய கணவர் உயிரோடு இருக்கின்ற காலம் வரை அவர் தன் பிள்ளைகளோடு பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரி தான். என்னுடைய கணவர் இறக்கின்ற காலம் வரை சொத்துக்கள் சம்மந்தமாக எவ்விதமாக பத்திரங்களை ஏற்படுத்தியது கிடையாது. 2வது பிரதிவாதி சொத்துக்கள் சிலவற்றை தன்னுடைய சொந்த செலவுக்காக விற்பனை செய்திருக்கின்றார். அந்த பத்திரத்தை என்னை மிரட்டி கையெழுத்து வாங்கிக்கொண்டார். அது எனக்கு பயன்ஏதும்

கொடுக்கவில்லை. கணவர் இறந்து போனபிறகு 2 வது பிரதிவாதி தான் குடும்பத்தில் மூத்த மகன் என்ற முறையில் பராமரிப்பு செய்து வந்தார் என்று சொன்னால் அவர் மூத்த மகன் என்று சொல்லிக்கொண்டு வருகின்ற வருமானத்தை அவரே எடுத்துக்கொண்டார். என்னடைய மற்ற குழந்தைகளுக்கு செய்யவேண்டிய சீர்வரிசைகள் யார் செய்வார்கள் என்று கேட்டால் யாரும் செய்வது கிடையாது. என்னுடைய கணவருக்கு என்னைத் தவிர வேறு மனைவி ஏதும் கிடையாது. அவருக்கு வழக்கில் கண்ட குழந்தைகள் தவிர வேறு குழந்தைகள் கிடையாது. 2 வது பிரதிவாதிக்கு நான் பெண் பார்த்து திருமணம் செய்யவில்லை அவராகவே செய்து கொண்டார். 2 வது பிரதிவாதி திருமணம் என் கணவர் இறப்பிற்கு பிறகு செய்தார். 2 வது வாதி அவராகவே திருமணம் செய்து கொண்டார். நான் மாப்பிள்ளை பார்த்து செய்து வைக்கவில்லை. ஆனால் 2 வது வாதியின் கணவர் உறவினர் தான். அவருடைய கணவர் என்னுடைய தகப்பனார் வழியில் எனக்கு தம்பி முறை. நான் இப்போது 20 வருட காலமாக தனியாக இருக்கின்றேன். எனக்கு என்னுடைய கணவருடைய பென்சன் இப்போது வருகின்றது. 2 வது பிரதிவாதி என்னை பராமரிக்கவில்லை. பெண் குழந்தை வந்து போக இருக்கின்றார்கள், 3 வது பிரதிவாதி திருமணத்திற்கு பிறகு தனியாக இருக்கின்றார். தாவா சொத்துக்கள் குழந்தைகளுக்கு பங்கு உண்டு என்று சொன்னால் சரி தான். கணவருடைய சொத்துக்கள் எனக்கும் உரிமை உண்மை. 2 வது பிரதிவாதி இந்த சொத்துக்களை அபகரிப்பதற்கு முயற்சி செய்கின்றார். 2 வது பிரதிவாதி சொத்துக்களை தன் சொத்துக்கள் என்று சொல்லி விற்பனை செய்திருக்கின்றார்., அவர் அவருடைய மனைவிக்கு பத்திரம் ஏதும் எழுதி வைத்திருக்கின்றாரா என்ற விபரம் எனக்குத் தெரியாது.

பிரதிவாதிகள் தரப்பில் யாரும் ஆஜர் ஆகவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது
வழக்குநர் முன்னிலையில் சாட்சியின்
வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில்
வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக்
காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொங்ளளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.